FMM SRI LANKA
නිදහස් මාධ්‍ය ව්‍යාපාරය
சுதந்திர ஊடக இயக்கம்
Free Media Movement

# මාධ්‍ය නිදහස: නිරීක්ෂණ වාර්තාව
# ஊடக சுதந்திரம்: கண்காணிப்பு அறிக்கை
# Media Freedom Rights Monitoring Report

MFRMD

## 2023 ஆகஸ்ட்

Vol. 03 - **தொகுதி 08**


உமாராவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை


ஊடகவியலாளர் சகாதேவன் நிலக்சனின் 16ஆம் ஆண்டு நினைவேந்தல்


சமூக ஊடகப் பதிவு காரணமாக காவல்துறையின் அழுத்தம்

ஊடக சுதந்திரம் குறித்து ஆகஸ்ட் மாதத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் மற்றும் கடந்தகால சம்பவங்களின் வளர்ச்சிப்போக்குகள் மற்றும் அந்தச் சம்பவங்கள் தொடர்பான அவதானிப்புகள் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துச் சுதந்திரம் மற்றும் பேச்சுச் சுதந்திரம் தொடர்பான நிகழ்வுகள் மற்றும் புதிய சட்ட உருவாக்கம், சட்டச் சீர்திருத்தங்கள், சட்டத் திருத்த முன்மொழிவுகளுக்கான தேசிய மற்றும் சர்வதேச கருத்துகள் போன்றவற்றிலும் இந்த அறிக்கை கவனம் செலுத்துகிறது. ஊடக சுதந்திரம் மற்றும் ஊடக உரிமைகள் தொடர்பில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகச் சுதந்திர ஊடக இயக்கம் தேர்ந்தெடுத்துள்ள பகுதி கூறுகள் மற்றும் நோக்கங்களுக்கு அமைய 15 நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் ஆகஸ்ட் 2023 அறிக்கையில் உள்வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவற்றில் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் தொடர்பான 05 சம்பவங்கள், சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் தொடர்பான 08 சம்பவங்கள், கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் தொடர்பான 02 சம்பவம் என மொத்தம் 14 நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் இம்மாதத்தில் அவதானிக்கப்பட்டுள்ளன.

## ஆகஸ்ட் மாதத்தில் கண்காணிக்கப்பட்ட சம்பவங்கள்:

01. பாடகி உமாரா சின்ஹவன்ச தேசிய கீதத்தை “திரிவுப்படுத்தி” பாடியதாக எழுந்த குற்றச்சாட்டை விசாரிக்க நியமிக்கப்பட்ட குழு முன்னிலையில் உமாரா ஆஜராகியமை.

02. ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதர கைது செய்யப்பட்டு தாக்கப்பட்டமைக்கு எதிராக ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கும் குழு (CPJ) தனது எதிர்ப்பைத் தெரிவித்தமை.

03. புலனாய்வு அதிகாரிகள் எனத் தம்மை அறிமுகப்படுத்திய இருவரினால் ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதரவின் தாயாரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டமை.

04. காலிமுகத்திடல் போராட்டத்தின் மீதான தாக்குதலைத் தடுக்க தவறியதற்கு பொறுப்புக் கூறுமாறு பொலிஸ் மா அதிபருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டமை.

05. யாழ் ஊடக அமையம், ஊடகவியலாளர் சகாதேவன் நிலக்சனின் 16ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தமை.

06. மருத்துவமனையில் நடந்த அநீதிகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்ட ஆசிரியருக்குப் பொலிஸார் அழுத்தம் கொடுத்துள்ளமை.

07. அரசாங்கம் முன்வைத்துள்ள உத்தேச ஒலி, ஒளிபரப்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு சட்ட வரைவு தொடர்பான கலந்துரையாடல் இலங்கை மன்றத்தில் ஏற்பாடு செய்யப்பட்டமை.

08. கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட மாணவர்களின் போராட்டம் ஒன்றின் மீது பொலிஸார் நீர்த்தாக்குதல் நடத்தியதுடன் 22 மாணவர்களைக் கைது செய்தமை.

09. நீதிமன்ற அவமதிப்பு சட்ட மூலத்திற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்கள்மீதான விசாரணை ஆரம்பிக்கப்பட்டமை.

10. "நீதிமன்றத்திற்கு, நியாயசபைக்கு அல்லது நீதி நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டமூலம்" தொடர்பில் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பைச் சபாநாயகர் பாராளுமன்றத்தில் அறிவித்தமை.

11. ஊடகவியலாளர் தரிந்து ஜயவர்தனவின் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளமை.

12. மட்டக்களப்பில் செய்தி அறிக்கையிடச் சென்ற மூன்று ஊடகவியலாளர்கள், ஒரு திட்டமிட் குழுவினரால் அச்சுறுத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டமை.

13. ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதரவுக்கு எதிரான வழக்கு: ஏனைய சந்தேக நபர்களை ஆஜர்படுத்தத் தவறியமை தொடர்பில் நீதிமன்றம் பொலிஸாருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளமை.

14. தகவல் ஆணைக்குழுவின் உத்தரவை மீறிய பொலிஸார் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஊடகவியலாளர் தரிந்து ஜயவர்தன தகவல் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளமை.

15. திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் செய்தி சேகரிக்க ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்கப்படாமை.

**அட்டவணை எண்: 01 அறிக்கையிடப்பட்ட மொத்த சம்பவங்களின் எண்ணிக்கை – 2023 ஆகஸ்ட் மாதம்**

| உள்ளடக்கப்பட்டுள்ள ஆக்க கூறுகள் | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 05 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் | 08 |
| கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் | 02 |
| **மொத்தம்** | **15** |

## பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம்

**ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் எனப்படுவது ஊடகவியலாளர்கள் தங்களது தொழிலை உடல் மற்றும் மனதை ஒர்முகப்படுத்தி சுயாதீனமாகத் தமது ஊடக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சுதந்திர மற்றும் சுயாதீன சூழலை உருவாக்குதல் ஆகும். இது ஊடக சுதந்திரத்தின் அடிப்படை காரணியாகவும் காணப்படுகின்றது. அதே சமயம், ஊடகச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டுமாயின், குடிமக்கள் ஊடகங்களில் அல்லது வேறு வழிகளிலிருந்து எதிர்விளைவுகளுக்கு உள்ளாகாமல் அல்லது தனது பாதுகாப்பிற்கு எவ்வித பாதிப்புக்களையும் எதிர்கொள்ளாமல் சுதந்திரமாகத் தனது கருத்தை வெளிப்படுத்தும் சூழல் உருவாக வேண்டும். கருத்துச் சுதந்திரம் என்பது அமைதியான முறையில் ஒன்றுகூடல், அமைதியான முறையில் போராட்டம் மேற்கொள்ளல் மற்றும் எதிர்ப்பு தெரிவித்தல் போன்ற உரிமைகளை உள்ளடக்கியதாகும். இவ்வடிப்படை உரிமைகள் மீறப்பட்ட பல சம்பவங்கள் ஆகஸ்ட் மாதத்தில் அவதானிக்கப்பட்டன. இவ்வடிப்படை உரிமைகள் மீறப்பட்ட 04 சம்பவங்கள் ஆகஸ்ட் மாதத்தில் அவதானிக்கப்பட்டன. சில சம்பவங்கள் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல் தொடர்பானவை என்பதனால் அந்தத் தலைப்பின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.**

**அட்டவணை 2 : 2023 ஆகஸ்ட் மாதம் : ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் – சம்பவங்கள் 05**

| உள்ளடக்கப்பட்டுள்ள ஆக்க கூறுகள் | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| இடையூறு விளைவித்தல் / சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடுகள் | 02 |
| உளவியல் ரீதியான பாதிப்புக்கள் | 03 |
| **மொத்தம்** | **05** |

01. **பாடகி உமாரா சின்ஹவன்ச தேசிய கீதத்தை "திரிபுப்படுத்தி" பாடியதாக எழுந்த குற்றச்சாட்டை விசாரிக்க நியமிக்கப்பட்ட குழு முன்னிலையில் உமாரா ஆஜராகியமை.**

கடந்த ஜூலை 30ஆம் திகதி நடைபெற்ற லங்கா பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டித் தொடக்க விழாவில் தேசிய கீதம் பாடப்பட்டமை தொடர்பில் ஆராய்வதற்கு பிரதமரின் உத்தரவின் பேரில் பொதுநிர்வாக அமைச்சின் செயலாளரினால் இந்தக் குழு நியமிக்கப்பட்டதுடன் குறித்த பாடகி 03 ஆம் திகதி விசாரணைக்காக அழைக்கப்பட்டார். பின்னர் இது தொடர்பில் அறிவிக்கப்பட்ட நிலையில், குறித்த நிகழ்வில் தேசிய கீதம் திரிவுபடுத்தப்பட்டதாக அமைச்சின் மேலதிக செயலாளர் (விசாரணை) தம்மிக்க முத்துகல தலைமையிலான குழு முடிவு

செய்தது. அது தொடர்பில் சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கான உரிய அறிக்கை சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஆதாரம்: youtube.com , sinhala.asianmirror.lk

02. **புலனாய்வு அதிகாரிகள் எனத் தம்மை அறிமுகப்படுத்திய இருவரினால் ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதரவின் தாயாரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டமை.**

கடந்த ஜூலை 28ஆம் திகதி ஆர்ப்பாட்டம் ஒன்றில் அறிக்கையிட்டுக்கொண்டிருந்த போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்ட தரிந்து உடுவரகெதர, ஜூலை 29ஆம் திகதி இரவு வைத்தியசாலையில் இருந்தபோது, பண்டாரவளையில் உள்ள அவரது வீட்டுக்குச் சென்ற புலனாய்வு அதிகாரிகள் இருவர், அவரது தாயார் திருமதி தம்மிகா ஜயசிங்கவிடம் விசாரணை நடத்தியுள்ளனர். இது தொடர்பில் ஊடகவியலாளரின் மனைவி மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளார்.

ஆதாரம்: facebook.com

03. **மருத்துவமனையில் நடந்த அநீதிகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்ட ஆசிரியருக்குப் பொலிஸார் அழுத்தம் கொடுத்துள்ளமை.**

நாகொட வைத்தியசாலையில் இடம்பெற்ற அநீதி தொடர்பில் மில்லனிய நெட்டேகடவில் வசிக்கும் நிமேஷா மதுவந்தி என்ற ஆசிரியை இந்தப் பதிவைப் பதிவிட்டுள்ளதுடன், வைத்தியசாலை அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் பேரில் அவரது வீட்டிற்கு வந்த தெற்கு களுத்துறை பொலிஸ் உத்தியோகத்தர்கள் உரிய சமூக ஊடக பதிவை அகற்றுமாறு அழுத்தம் கொடுத்துள்ளனர். பின்னர் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் ஊடகங்களில் வெளியானதையடுத்து, எதிர்க்கட்சித் தலைவர் இதுகுறித்து நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

ஆதாரம்: divaina.lk

04. **மட்டக்களப்பில் செய்தி அறிக்கையிடச் சென்ற மூன்று ஊடகவியலாளர்கள், ஒரு திட்டமிட் குழுவினரால் அச்சுறுத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டமை.**

ஆகஸ்ட் 22ஆம் திகதி மட்டக்களப்பில் மயிலாடமடு பிரதேசத்தில் காணி சுவீகரிப்பு தொடர்பிலான தகவல்களைத் அறிக்கையிடச் சென்ற மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் செயலாளரான எஸ்.நிலாந்தன், கிறிஸ்டிராஜ், கிருஷ்ணகுமார் என்ற ஊடகவியலாளர்கள் மற்றும் அவர்களுடன் இருந்த கத்தோலிக்க பாதிரியார்கள் மற்றும் சிவில் ஆர்வலர்கள் இந்த அச்சுறுத்தலை எதிர்கொண்டனர். பௌத்த துறவி ஒருவரின் தலைமையிலான குழுவினர் அவர்களைக் கிட்டத்தட்ட 5 மணிநேரம் தடுத்து நிறுத்தி அவர்கள் படம்பிடித்த காட்சிகளை வலுக்கட்டாயமாக நீக்கியுள்ளனர். இச்சம்பவம் குறித்து இலங்கை அரசு விசாரணை நடத்தி சம்பந்தப்பட்ட ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என "ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கும் குழு" (CPJ) விடுத்துள்ள அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.

05. **திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் செய்தி சேகரிக்க ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்கப்படாமை.**

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் திருகோணமலை மாவட்டத்தைத் தவிர அனைத்து மாவட்டங்களில் ஒருங்கிணைப்புக் கூட்டங்களை அறிக்கையிட ஊடகவியலாளர்களுக்குச் சந்தர்ப்பம் காணப்படுகின்ற போதிலும், திருகோணமலை மாவட்டத்தில் மாத்திரம் அந்த வாய்ப்பை இழந்துள்ளதாக ஊடகவியலாளர்கள் ஆதங்கப்படுகிறனர். ஆளுநர் மற்றும் இன்னொரு எம்.பி.யின் ஊடக பிரிவுகளுக்கு மாத்திரமே இந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும், இது ஊடகவியலாளர்களின் தொழில் உரிமையையும், பொதுமக்களின் தகவல் அறியும் உரிமையையும் மீறும் செயற்பாடு என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆதாரம்: MFRM Desk

## சட்ட வரையறை அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள்

**பத்திரிகை சுதந்திரம் தொடர்பான சட்ட வரையறை அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகளின் கீழ் ஆகஸ்ட் மாதத்தில் 08 சம்பவங்கள் அவதானிக்கப்பட்டன. பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரம் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் மற்றும் முந்தைய நிகழ்வுகளின் முன்னேற்றங்கள் இதில் அடங்கும். கருத்துச் சுதந்திரம் மற்றும் ஊடகச் சுதந்திரத்துக்குச் சவாலாக இருந்த 'நீதிமன்றத்திற்கு, நியாயசபைக்கு அல்லது நீதி நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டமூலம்'வின் 9ஆம் பிரிவுகள் அரசியல் செல்லுபடியாகாது என்ற உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு ஊடக சுதந்திரம் தொடர்பான சாதகமான நிகழ்வாகக் கருத முடியும்.**

**அட்டவணை 03 – 2023 ஆகஸ்ட் : சட்ட வரையறை அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள்– 08 சம்பவங்கள்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல் | 05 |
| சட்ட சீர்திருத்தங்கள் | 02 |
| ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றச்செயல்களுக்கு தண்டனையின்மையை முடிவுக்குக் கொண்டுவருதல் | 01 |
| **மொத்தம்** | **08** |

**01. காலிமுகத்திடல் போராட்டத்தின் மீதான தாக்குதலைத் தடுக்க தவறியதற்கு பொறுப்புக் கூறுமாறு பொலிஸ் மா அதிபருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டமை.**

காலிமுகத்திடல் போராட்ட பூமியில் 2022 மே மாதம் 09ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைத் தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமை தொடர்பில் கருத்து தெரிவிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் பொலிஸ் மா அதிபர் சீ.டீ. விக்ரமரத்னவிற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

போராட்டத்தின் செயற்பாட்டாளரான ஜனக் எஸ் விதாரண தாக்கல் செய்த ரிட் மனு நீதிபதிகள் தலைவரான நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஏ.மரிக்கார் ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் அழைக்கப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆதாரம்: sinhala.lankanewsweb.net

**02. யாழ் ஊடக அமையம், ஊடகவியலாளர் சகாதேவன் நிலக்சனின் 16ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தமை.**

16 வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட இளம் ஊடகவியலாளர் சகாதேவன் நிலக்சனுக்கான நினைவேந்தல், கொலை செய்யப்பட்ட ஆகஸ்ட் முதலாம் திகதி யாழ்.ஊடகச் அமையத்தில் நடைபெற்றது. யாழ்.பல்கலைக்கழகத்தில் இதழியல் கற்கும் மாணவன், இளைஞர் சஞ்சிகையின் ஆசிரியராகப் பதவிவகித்த இவர் கொலைசெய்யப்படும்போது அவரது வயது இருபத்தி இரண்டு ஆகும். மேலும் இந்தக் கொலையில் ஈடுபட்ட குற்றவாளிகளுக்கு எதிராக இதுவரை சட்டம் அமுல்படுத்தப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆதாரம்: theleader.lk

**03. கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட மாணவர்களின் போராட்டம் ஒன்றின் மீது பொலிஸார் நீர்த்தாக்குதல் நடத்தியதுடன் 22 மாணவர்களைக் கைது செய்தமை.**

அனைத்து பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கடந்த ஆகஸ்ட் 10ஆம் திகதி கொழும்பு விகாரமஹாதேவி பூங்காவிற்கு அருகில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தைக் கலைப்பதற்காக நீர்த்தாரை தாக்குதல் மேற்கொண்ட பொலிஸார் அங்கு இருந்த சில மாணவர்களைக் கைது செய்துள்ளனர். அதற்குச் சமாந்தரமாகக் கிருலப்பனையில் நடைபெற்ற மாணவர் போராட்டமும் நீர்த்தாக்குதல்களால் கலைக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட மாணவர்கள் மறுநாள் அளுத்கடை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு தலா இருபத்தைந்தாயிரம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

ஆதாரம்: www.lankaskynews.com

**04. நீதிமன்ற அவமதிப்பு சட்ட மூலத்திற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்கள்மீதான விசாரணை ஆரம்பிக்கப்பட்டமை.**

அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்ட "நீதிமன்றத்திற்கு, நியாயசபைக்கு அல்லது நீதி நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டமூல" த்திற்கு எதிராகத் தாக்கல்செய்யப்பட்ட 06 மனுக்கள் ஆகஸ்ட் 03 ஆம் திகதி முதல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. சட்ட விதிகளின் அடிப்படையில், குடிமக்களின் கருத்து தெரிவிக்கும் உரிமை பாரிய சவாலுக்கு உட்படுத்துவதாக மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கலாநிதி விசாகேச சந்திரசேகரம், சட்டத்தரணிகளான பசில் பெர்னாண்டோ, கிங்ஸ்லி கருணாரத்ன, சஞ்சய தசநாயக்க, நந்துன் நாகஹவத்த மற்றும் நாகாநந்த கொடித்துவக்கு ஆகியோர் இந்த மனுக்களைச் சமர்ப்பித்ததுடன், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் ஊடகவியலாளர் தரிந்து ஜயவர்தன ஆகியோர் இடைக்கால மனுதாரர்களாக ஆஜராகியிருந்தனர். முர்து பெர்னாண்டோ, ஷிரான் குணரத்ன மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகிய மூவரடங்கிய உச்ச நீதிமன்ற அமர்வு முன்னிலையில் இந்த மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

ஆதாரம்: MFRM Desk, adaderana.lk

**05. ஊடகவியலாளர் தரிந்து ஜயவர்தனவின் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளமை.**

செய்தி மாநாட்டில் தெரிவித்த கருத்து நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் காணப்படுகின்றதா என்பது தொடர்பில் விசாரணை நடத்துமாறு கொழும்பு கோட்டை நீதவான் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு வழங்கிய உத்தரவைச் செல்லுபடியற்றதாக்குமாறு மேல்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனு நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராகவே இந்த மேன்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவை விசாரிக்கத் தீர்மானித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், சட்டமா அதிபர், குற்றப் புலனாய்வுத் திணைக்களம் உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு நோட்டீஸ் அனுப்புமாறு ஆகஸ்ட் 29ஆம் திகதி உத்தரவிட்டது.

ஆதாரம்: thetime.lk

**06. ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதரவுக்கு எதிரான வழக்கு: ஏனைய சந்தேக நபர்களை ஆஜர்படுத்தத் தவறியமை தொடர்பில் நீதிமன்றம் பொலிஸாருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளமை.**

போராட்டம் ஒன்றில் செய்தி வெளியிடும் பணியில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதரவை கைது செய்தமை தொடர்பான வழக்கு ஆகஸ்ட் 29 ஆம் திகதி அளுத்கடை இலக்கம் 2 நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதுடன், சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய சந்தேக நபர்கள் இருப்பதாகப் பொலிஸார் தெரிவித்த போதிலும், ஒரு மாதம் கடந்தும் அந்தச் சந்தேக நபர்களை ஆஜர்படுத்தத் தவறியதற்காக நீதவான் பொலிஸாரை எச்சரித்தார். காரணமின்றி வழக்கு தொடர்வதில் அர்த்தமில்லை எனவும் நீதவான் குறிப்பிட்டுள்ளார். இந்த வழக்கு அக்டோபர் 24ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. கைது செய்தல், தாக்குதல் மற்றும் சிகிச்சைக்கு அனுப்புவதில் தாமதம் செய்ததற்காகப் பல தரப்பினரால் காவல்துறை கடுமையாக விமர்சிக்கப்பட்டது, மேலும் மனித உரிமை ஆணையமும் இது தொடர்பில் விசாரணையை ஆரம்பித்துள்ளது.

ஆதாரம்: MFRM Desk

**07. "நீதிமன்றத்திற்கு, நியாயசபைக்கு அல்லது நீதி நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டமூலம்" தொடர்பில் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பைச் சபாநாயகர் பாராளுமன்றத்தில் அறிவித்தமை.**

இந்தச் சட்ட மூலத்திற்கு எதிரான 6 மனுக்களைப் பரிசீலித்த உச்சநீதிமன்றம், அதில் உள்ள 9ஆம் பிரிவுகள் அரசியலமைப்புக்கு எதிரானது என்று தீர்ப்பளித்தது. உச்சநீதிமன்றத்தின் மூலம் சபாநாயகருக்கு அனுப்பிவைக்கப்பட்ட குறித்த உத்தரவை , ஆகஸ்ட் 22 ஆம் திகதி சபாநாயகர் பாராளுமன்றத்தில் முன்வைத்தார். நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மற்றும் வாக்கெடுப்பு மூலம் மட்டுமே உரிய சரத்துக்களை நிறைவேற்ற முடியும் என உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

ஆதாரம்: newsradio.lk

08. **தகவல் ஆணைக்குழுவின் உத்தரவை மீறிய பொலிஸார் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு ஊடகவியலாளர் தரிந்து ஜயவர்தன தகவல் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளமை.**

பொலிஸ் தகவல் அதிகாரியிடம் கோரிய தகவல்களை வழங்காமை மற்றும் நியமிக்கப்பட்ட அதிகாரி பொலிஸ் மா அதிபரிடம் செய்த முறையீட்டுக்குப் பதிலளிக்காமை தொடர்பில் ஊடகவியலாளர் தரிந்து ஜயவர்தன விடுத்த மேன்முறையீட்டை பரிசீலித்த தகவல் ஆணைக்குழு, குறித்த தகவல்களை ஆகஸ்ட் 22 க்கு முன் பெற்றுத்தருமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தது.

காவல்துறை அதைச் செய்யத் தவறியதால், தகவல் சட்டத்தின் 39வது பிரிவின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு தகவல் ஆணையத்திடம் குறித்த ஊடகவியலாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆதாரம்: thetime.lk

---

## கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள்

**'கட்டமைப்புரீதியான விதிமுறைகள்" ஊடக சுதந்திரத்தின் மற்றொரு முக்கிய அங்கமாகும். ஊடக தொகுதியின் முழு கட்டமைப்பிற்கும் மற்றும் ஊடக சுதந்திரம் இயக்கப்படும் ஒட்டுமொத்த சூழலுக்கும் பொருந்தக்கூடிய 06 சாத்தியமான குறிகாட்டிகளை உள்ளடக்கியுள்ளது. "கண்காணிப்புக் குழுக்களின் ஊடக சுதந்திரத்திற்கான செயல்திறன்சார் ஆதரவு" என்ற குறிகாட்டியின் கீழ் இரு சம்பவங்கள் இதில் அடங்கும்.**

**அட்டவணை 05–2023 ஆகஸ்ட் கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் – 02 சம்பவம்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| கண்காணிப்பு குழுக்களின் ஊடக சுதந்திரத்திற்கான ஆதரவு | 02 |
| **மொத்தம்** | **02** |

01. **ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதர கைது செய்யப்பட்டு தாக்கப்பட்டமைக்கு எதிராக ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கும் குழு (CPJ) தனது எதிர்ப்பைத் தெரிவித்தமை.**

போராட்டத்தை அறிக்கையிட்டுக்கொண்டிருந்த தரிந்து உடுவரகெதர கைது செய்தமை, தாக்கப்பட்டமை மற்றும் மருத்துவ சிகிச்சை வழங்காமை தொடர்பில் எதிர்ப்பைத் தெரிவித்த CPJ அமைப்பு, அவரை நிபந்தனையின்றி விடுதலை செய்யுமாறும், தாக்கப்பட்டமை சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளுமாறும் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது. ஊடகவியலாளர்களைப் அரசாங்கம் பழிவாங்கும் என்ற அச்சமின்றி போராட்டங்களைச் அறிக்கையிட முடியும் என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆதாரம்: cpj.org

02. **அரசாங்கம் முன்வைத்துள்ள உத்தேச ஒலி, ஒளிபரப்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு சட்ட வரைவு தொடர்பான கலந்துரையாடல் இலங்கை மன்றத்தில் ஏற்பாடு செய்யப்பட்டமை.**

இதுவரை குறித்த சட்டவரைவு தொடர்பாகக் கருத்து தெரிவித்துள்ள பல தரப்பினர்களின் பங்கேற்புடன் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடல் பேராசிரியர் ரொஹான் சமரஜீவ, கலாநிதி பாக்யசோதி சரவணமுத்து, பேராசிரியர் சரித ஹேரத், இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி குமார் லோபஸ், இலங்கை ஒலிபரப்பாளர் மன்றத்தின் தலைவர் அசங்க ஜயசூரிய, ஊடக சட்ட மன்றத்தின் செயற்பாட்டுப் பணிப்பாளர் சட்டத்தரணி பிரபோத ரத்நாயக்க, சட்டத்தரணி மனுஷிகா குரே ஆகியோர் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தனர். சுதந்திர ஊடக இயக்கமும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன.

ஆதாரம்: facebook.com

**அட்டவணை 5: ஊடக சுதந்திரம்: 2023 ஜனவரி முதல் ஆகஸ்ட் வரையான காலப்பகுதிக்குள் சுதந்திர ஊடக இயக்கத்தால் அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை**

| உள்ளடக்கப்பட்டுள்ள குறிகாட்டிகள் | 2023 ஜனவரி–ஜூலை | | 2023 ஆகஸ்ட் |
|---|---|---|---|
| | புதிய சம்பவங்கள் | முன்னைய சம்பவங்களின் வளர்ச்சிப்போக்கு | |
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 27 | - | 05 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் | 49 | 16 | 08 |
| ஊடக சுயாதீனத்துவம் | - | - | - |
| தொழிற்முறையியம் | 05 | - | - |
| கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் | 22 | - | 02 |
| **மொத்தம்** | **103** | **16** | **15** |

2023 ஊடக சுதந்திர உரிமைகள் கண்காணிப்பு அறிக்கை

**பின்னுரை:** சிவில் சமூக குறிக்கோள்கள், தேசிய மற்றும் சர்வதேச வழக்கு தீர்ப்புகள் மற்றும் அனைத்துலக பிரகடனாங்களுக்கு ஏற்ப, ஊடக சுதந்திரம் என்பது மனித உரிமை என சுதந்திர ஊடக இயக்கம் உடன்படுவதுடன்.அனைத்து மனிதர்களுக்கும் காணப்படவேண்டிய சிந்தனை சுதந்திரம், மனசாட்சி சுதந்திரம், மதச்சுதந்திரம் மற்றும் மற்றவர்களின் கருத்துக்களை தெரிந்து கொள்வதற்கான அடிப்படை உரிமைகளை தடையேதும் இன்றி அனுபவிப்பதற்கான சுதந்திரமே மனித உரிமையாகும். இந்த அடிப்படையில் ஊடக சுதந்திரம் என்பது பின்வரும் பத்து பகுதிகளை உள்ளடக்கிய தொகுப்பு என சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

(1) சிந்தனை சுதந்திரம் (2) கருத்து தரிப்பதற்கான சுதந்திரம் (3) கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் (4) அமைதியான முறையில் மேற்கொள்ளப்படும் ஒன்றுகூடல் உரிமை மற்றும் கருத்து தெரிவிக்கும் சுதந்திரம் (5) தகவல் அறியும் உரிமை (6) கேட்டல் மற்றும் பார்த்தல் வழி சார்ந்த பதிவு செய்தல் மற்றும் அறிக்கை வைத்துக்கொள்வதற்கான சுதந்திரம் (7) பதிப்புச்சுதந்திரம் (8) செய்திப்பத்திரிகை சுதந்திரம் (9) இலத்திரனியல் ஊடக சுதந்திரம் (10) இணைய சுதந்திரம். என்பனவையே இதன் பகுதிகூறுகள் ஆகும்.

இந்த ஒவ்வொரு பகுதிகளும் ஒன்றோடொன்று தொடர்பு உடையதாக காணப்படுவதனால் ஒரு பகுதிகூறுக்கு ஏற்படும் வரையறைகள் மற்றும் தாக்கங்கள் ஊடக சுதந்திரம் தொடர்பில் காணப்படும் அனைத்து பகுதிக்கூறுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை சுதந்திர ஊடக இயக்கம் ஏற்றுக்கொள்கின்றது. எனவே பொறுப்பற்று மற்றும் வெறுப்புணர்வுடன் மேலே குறிப்பிட்ட சுதந்திரங்களை அத்துமீறி அனுபவிப்பதானது சிறந்ததொரு முறையல்ல என்பதனை சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

இந்த மாதாந்த அறிக்கை தயாரிக்கபடுவது பொது ஊடகத்தில் பிரசுரிக்கப்படும் மற்றும் சுதந்திர ஊடக இயக்கத்திற்கு கிடைக்கப்பெறும் தவல்களுக்கு அமைய மேலதிக தகவல்களை தேடி அறிந்து அந்த நிகழ்வுகளை ஆய்வுக்குட்படுத்திய பின்னரேயாகும்.இந்த ஆய்வின் போது சுதந்திர ஊடக இயக்கம் மேலே குறிப்பிட்ட பத்து ஊடக சுதந்திர சுட்டெண் பகுதிகளை உள்ளடக்கிய சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏழு தொகுப்புகளின் ஊடாக தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை அளவுகோல்களை கொண்டே கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொள்கின்றது.


Free Media Movement

Convener: Hana Ibrahim +94 77 741 2995 | Secretary: Lasantha De Silva +94 71 166 7938, +94 77 810 7620
Treasurer: Thaha Muzammil +94 77 3741026 | Assistant Secretary: Priyadarshani Sivaraja +94 772530258
No 96, Bernard Soysa Mw, Colombo 05. Tel: +94 112368895 Fax: +94 112368895
Web: www.fmmsrilanka.lk, www.mediareform.lk
Email: fmmsrilanka@gmail.com|Facebook: https://www.facebook.com/fmm.srilanka
Twitter: https://twitter.com/FMMsrilanka|#FMM25


Layout: Nalinda Seneviratne